Registered No. M-4345.

# யுத்த சஞ்சிகை

மலர் I.] 1941-ம௵ ஆகஸ்ட்டுமீ 22௳, வெள்ளிக்கிழமை. [இதழ் 23

## யுத்த ஆண்டு விழா—1941.

### லாப நஷ்ட குறிப்பேடு.

### " புயற்காற்றைச் சவாரி செய்த கதை."

### 1. அச்சு நாடுகள்.

## 1940.

### ஹிட்லருடைய ஆவேச எழுச்சி.

### (அ) வெற்றிகள்.

1. போலந்து ஹிட்லரால் விரைவாகக் கைப்பற்றப்படுகிறது; ஆனல் நேசதேசத்தார்கள் வரப்போகும் தீங்கை அறியவில்லை. அவர்களுடைய சாவதானமான மனப்பான்மையைத் தனக்கு அனுகூலமாகக்கொண்டு, ஹிட்லர் முரட்டுத்தலைவிரி கோலமாக ஆடினுர். அதன் முடிவு:

நார்வே, ஹாலந்து, பெல்ஜியம், பிரான்சு இவைகளெல்லாம் ஜெர்மனியால் அதிக்கிரமிக்கப்பட்டன.

2. இத்தாலி, கொள்ளையடித்ததில் பங்கு கேட்பதற்காக யுத்தத்தில் ஈடுபடுகிறது. பிரிட்டன், ஆப்பிரிக்காவில் உள்ள பிரிட்டிஷ் சோமாலிலாந்து பிரதேசத்தை விட்டுவிட்டு வெளியேறுகிறது.

3. ரஷ்யா நடுநிலைமை வகிக்கிறது; ஆனல் ஜெர்மனிக்கு அனுகூலமாக இருக்கிறது. மற்ற நடுநிலைமை நாடுகளும், எதேச்சாதிகார வல்லரசுகளின் போக்கைக் கண்டு, ஜெர்மனிக்கு அனுகூலமாக இருக்கின்றன.

4. ருமேனியா அச்சுநாடுகளுடன் சேர்ந்துகொண்டு, தன்னுடைய பெட்ரோல் எண்ணெய்களை ஜெர்மனிக்குக் கொடுக்கிறது. இதல்லாமல், நடு நிலைமையாயிருக்கும் பால்கன் நாடுகளிலிருந்தும் ஜெர்மனி தனக்கு வேண்டிய சாமான்களைப் பெறுகிறது.

5. பிரெஞ்சுத் துறைமுகங்களைப் பிடித்தால், ஜெர்மனிக்கு உண்டான சௌகரியங்களுக்குப் பிறகு, பிரிட்டன் ஜெர்மனிக்கு விரோதமாக பொருளாதார முற்றுகை போட்டு, ஜெர்மனிக்கு சாமான்கள் கொண்டு போகாதபடி தடுத்துக்கொண்டிருக்கிறது.

## 1941.

### கடற்படை பலத்தின் பயன்.

### (அ) கஷ்டங்கள்.

1. பிரிட்டனுக்கு ஏற்பட்டிருந்த பெருந்தீங்கு, ஜெர்மனிக்கும், ஜெர்மனியால் அதிக்கிரமிக்கப்பட்ட நாடுகளுக்கும் ஏற்பட்ட தீங்காகமாறியது. ஜெர்மனி இரண்டு யுத்த அரங்கங்களில் ஒரே சமயத்தில் போர்புரியப் பயந்துகொண்டிருந்தது. அந்தப்பயம் உண்மையாய்விட்டது. அதிக்கிரமித்த நாடுகள் ஜெர்மனியால் கொள்ளை யடிக்கப்பட்ட பின் ராணுவச்சுமைகளாகவும், பொருளாதாரச் சுமைகளாகவும், ஜெர்மனிக்கு கஷ்டமும் மனக்கவலையும் கொடுத்துக்கொண்டிருக்கின்றன.

நேசதேச நாடுகள் எல்லாவற்றிலும், சாவதானமான மனப்பான்மைக்குப்பதிலாக, தீவிரமான மன உறுதி ஏற்பட்டிருக்கிறது.

2. இத்தாலி, ஜெர்மனி அதிக்கிரமித்த நாட்டைப் போலாய் விடுகிறது. ஆப்பிரிக்காவில், இத்தாலிய ஏகாதிபத்தியத்தின் பெரும்பாகம் இழக்கப்படுகிறது; அத்துடன் இத்தாலிய தரைப்படையும் ஆகாய விமானப்படையும் அழிக்கப்படுகின்றன. மத்திய தரைக்கடலில், இத்தாலிய கடற்படையின் பெரும்பாகம் அழிக்கப்படுகிறது. அல்டேனியாவில், கிரேக்க வீரர்களுக்கு எதிராகப் போராடியதில், இத்தாலி தன் கௌரவத்தையும் இழந்துவிட்டது. முசலோனியின் பேராசையினுல், இத்தாலி உலகத்தின் அவமதிப்பைப்பெற்று, அநேகவருஷ முன்னேற்றப்பலன்களை இழந்துவிட்டது. இப்போது மத்தியதரைக்கடலிலும், மத்திய கிழக்கரங்கத்திலும், அதிகரித்துக் கொண்டுவரும் பிரிட்டிஷ் கடற்படை பலம் அதற்கு பயத்தை உண்டாக்கிக் கொண்டிருக்கிறது.

3. இப்போது ரஷ்யா ஜெர்மனியுடன் போராடுகிறது. ரஷ்யாவினுடைய மகத்தான, திறமை வாய்ந்த துருப்புகள் ஜெர்மன் ராணுவ பலத்தோடு யுத்தம் செய்கின்றன. மற்றொரு பக்கத்தில், பிரிட்டிஷ் கடற்படை பலம் ஜெர்மனியை நசுக்கிக் கொண்டிருக்கிறது. ஹிட்லருடைய முடிவு காலமும், நாஸிக் கட்சியின் அழிவு காலமும், அறிவற்ற பேராசையுடைய ஜெர்மனியின் அந்தியகாலமும் கிட்டிவிட்டன.

பிரிட்டன் தான் கடைசியில் வெற்றிபெறும் என்று நடு நிலைமை நாடுகள் முன்பு கொண்டுள்ள நம்பிக்கையை மீண்டும் பெற்றிருக்கின்றன. கிரீசும், யூகோஸ்லாவியாவும், ஜெர்மனிக்கு விரோதமாகப் போர் புரிந்தன. அவைகள் மீண்டும் தலையெடுத்து சுதந்திரம்பெறும். துருக்கியின் சுதந்தரத்துக்குச் சதாகேடு நேரும்போலிருந்தாலும், பிரிட்டனோடுசெய்துகொண்ட உடன் படிக்கைகளுக்குத் துருக்கி உண்மையாயிருக்கிறது. தென்னமெரிக்காவிலுள்ள குடியரசுகள் ஜெர்மன் முயற்சிகளைத் திறமையாக அடக்கியிருக்கின்றன.

4. ருமேனியா தன்நாட்டில் மூன்றில் ஒருபங்கை இழந்துவிடுகிறது. அதனுடைய உணவுப்பொருள்கள் ஜெர்மனிக்கு அனுப்பப்படுவதால் ருமேனிய மக்கள் பட்டினி கிடந்து வாடுகிருர்கள். ருமேனியா இப்போது நாஸிகளுடைய யுத்தத்தில் இழுக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய தேசீய பொக்கிஷமான பெட்ரோல் எண்ணெய்க் களஞ்சியங்களை ரஷ்யா வெடி குண்டுகளால் தாக்குகிறது.

பால்கன் பிரதேசத்தில் நடந்த சண்டையினுலும், கிரீசும், யூகோஸ்லாவியாவும் தன்னைத் தொடர்ந்து போரிட்டதனுலும், ஜெர்மனி, பால்கன் தீபகற்பத்திலிருந்து கிடைக்கவேண்டிய 'சப்ளை'களைப் பெரும்பாலும் இழந்துவிட்டது. பால்கன் வயற்காடு சண்டைக் காடாக ஆக்கப்பட்டது.

5. அட்லாண்டிக் கடலில் நடக்கும் மாபெரும் யுத்தத்தில் பிரிட்டன் வெற்றி பெற்றுக்கொண்டு வருகிறது. பிரிட்டனுடைய கடல் வழிகள் ஜெர்மனியால் மூடப்படவில்லை. அட்லாண்டிக் கடலில், ஜெர்மனி தன்னுடைய யுத்த கப்பல்களில் சிறந்தவையான சப்மரீன்களைப் பெரும்பாலும் இழந்துவிட்டது. மிகுதியாயுள்ள சாதாரண யுத்தக் கப்பல்கள் துரத்தப்பட்டு துறைமுகங்களில் ஒளிந்துகொண்டன.

## 1940

6. ஜெர்மனியின் மின்னல் தாக்கு முறைகள் உலகத்தைப் பிரமிக்கும்படி செய்கின்றன. ஜெர்மன் பட்டாளம் யாராலும் தோற்கடிக்க முடியாதுபோலத் தோன்றுகிறது.

7. ஜெர்மனி எல்லாவித யுத்த ஆயுத உற்பத்திகளில தலை சிறந்து விளங்கி முன்னேறிச் சென்றுகொண்டிருக்கிறது.

8. ஹிட்லருடைய ஐந்தாம் படை தந்திரங்கள் பலன் தரும்படியான ஒரு முக்கிய ஆயுதமாய் இருக்கிறது.

### (ஆ) எதிர் காலம்.

1. ஜெர்மனி வருகிற மழைக்காலத்துக்குள் வெற்றியடையப் போவதாகப் பூரண நம்பிக்கை கொண்டிருக்கிறது.

2. பிரிட்டனுடைய கடற்படை பலத்தை ஜெர்மனியின் ஆகாய விமானப் பலம் பிரயோசனமில்லாமற் செய்துவிட்டதுபோல் தோன்றுகிறது.

3. வல்லரசுகளின் அரசியலும், ஜெர்மனியின் "பான்சர்" படைகளும் ஜெயிக்க முடியாதனபோல் தோன்றுகின்றன.

**ஆனால் :—**

4. பிரிட்டன் ஐரோப்பா கண்டத்தைப் பொருளாதார முற்றுகை போட்டிருக்கிறது.

5. ஹிட்லர் பிரிட்டனுடன் சமாதானமாகப் போவதாகச் செய்த அறிவிப்பு, பிரிட்டனால் நிராகரிக்கப்பட்டது.

6. ஜெர்மன் ஆகாய விமானப்படை பிரிட்டனைத் தாக்குவதற்காக வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யவில்லை. பிரிட்டனில் ஹிட்லரின் ஐந்தாம் படை கிடையாது.

7. ஜெர்மனி பிரிட்டனைத் தாக்கும் முயற்சிகள் செப்டெம்பர் மாதம் 16-ந்தேதி வரை தள்ளிவைக்கப்பட்டிருக்கின்றன.

8. இத்தாலி, ஜெர்மனிக்கு ஒரு பெரிய ஏமாற்றமாய் முடிந்தது. பிரிட்டிஷ் கடற்படை மத்தியதரைக் கடலில் எப்போதும் போல ஆதிக்கம் பெற்று விளங்குகிறது. பிரிட்டிஷ் படைகள் எகிப்து தேசத்தில் யாதொரு சேதமுமில்லாமல் பத்திரமாய் இருக்கிறது.

## 1941

6. ஜெர்மனியின் மின்னல் தாக்கு முறை ரஷ்யாவில் பலிக்கவில்லை. தங்களைவிட எண்ணிக்கையில் அதிகமான துருப்புகளையும், சிறந்த யுத்த முஸ்தீப்பு தளவாடங்களையும் உடைய தேசத்தோடு இப்போது தான் ஜெர்மனி முதன் முதலாகப் போர்புரிகிறது. ஹிட்லரின் பிரசார மந்திரி, கோப்பல்ஸ், ஜெர்மன் பட்டாளத்தை யாராகிலும் தோற்கடிக்க முடியாது என்று கூறிய டம்பப்பேச்சு ரஷ்யாவில் பொய்யாக்கப்பட்டது.

7. ஜெர்மனியின் உற்பத்தி உச்சநிலை அடைந்துவிட்டது. அதிக்கிரமித்த நாடுகளின் தொழிற்சாலை வசதிகளை உபயோகித்துங்கூட உற்பத்தியை அதிகரிக்கும்படி செய்யமுடியவில்லை. ஆனால், பிரிட்டன் யுத்த சாமான் உற்பத்தி செய்வதில் முன்னேறிச் சென்றுகொண்டேயிருக்கிறது. இதல்லாமல், அமெரிக்காவிலிருந்தும், ஏகாதிபத்திய நாடுகளிலிருந்தும், பிரிட்டனுக்கு ஏராளமான யுத்த சாமான்கள் வந்துகொண்டேயிருக்கின்றன. ஜெர்மனியர்கள் பின்னால் உதவியாயிருப்பதற்குப் பிரத்தியேகமாக ஒதுக்கிவைத்திருந்த யுத்த சாமான்கள் ரஷ்ய யுத்தத்தினால் துரிதமாகக் குறைந்துபோய்க்கொண்டிருக்கின்றன.

8. ஐந்தாம் படை ஆயுதத்தின் கூர் மொட்டையாக்கப்பட்டது. ரஷ்யாவில் யூக்ரெயின் மாகாணத்தில், ஐந்தாம் படை வேண்டிய காரியத்தைச் சாதிக்கும் என்று ஹிட்லர் நம்பியது ஒன்றுக்கும் பயனில்லாமல் போய்விட்டது. நேச தேசத்தார்கள் ஜெர்மனிக்குத் தீங்கு விளைவிக்கும் தன்மை அதிகரிக்க அதிகரிக்க, ஜெர்மனி அதிக்கிரமித்த நாடுகளில் நேசதேசத்தார் கட்டாயம் வெற்றி பெறுவார்கள் என்ற உணர்ச்சி பலப்பட்டுக்கொண்டு வருகிறது; அதனால் ஹிட்லரின் ஐந்தாம் படை பிரயோசனமற்றதாய்விட்டது. அதன் பயனாக ஏற்பட்டிருக்கும் வெறுப்பு ஜெர்மனிக்குப் பின்னால் கேடு விளைவிக்கும்.

### (ஆ) நடந்த விஷயம்.

1. "மழைக் காலத்துக்குமுன் சமாதானம்" என்றவெற்றி நோக்கம் எப்படி நிறைவேறும் என்று எந்த ஜெர்மானியனும் சொல்லமுடியவில்லை. வெற்றிக்கனவு வீண்கனவுதான்.

2. குறுகிய கடற்பிரதேசங்களில் ஆகாய விமானப் பலம் கடற்படைப் பலத்தைக் குறைக்காமே ஒழிய பிரயோசனமில்லாமல் செய்துவிட முடியாது. சமுத்திரங்களில் கடற்படை பலம் தலையெடுத்து விளங்குகிறது.

3. ஜெர்மன் பிரசார பலத்தினால் வளர்க்கப்பட்ட இந்த எண்ணங்களை ரஷ்யா உடைத்துவிட்டது.

**அப்போது :—**

4. பொருளாதார முற்றுகை தொடர்ந்து நடந்துகொண்டிருக்கும்போது, பிரிட்டிஷ் கடற்படைக்கு அதிக யுத்தக் கப்பல்களும், பிரிட்டிஷ் கடற்கரைப் பாதுகாப்பு ஆகாய விமானப் படைக்கு அதிகப்படியான ஆகாய விமானங்களும் சேர்க்கப்பட்டு வருகின்றன. ஹிட்லர் ரஷ்யாவைத் தாக்கியதன் காரணம், குறைந்துபோய்க்கொண்டிருக்கும் 'சப்ளை' சாமான்களைச் சரிப்படுத்துவதற்காக ரஷ்யாவை கொள்ளையடிக்கலாம் என்பது தான். வெளி நாடுகளிலிருந்து யுத்த சாமான்கள் முதலியன இப்போது ஜெர்மனிக்குக் கிடைப்பதில்லை.

5. சமாதானப் பேச்சைப்பற்றி, பிரிட்டனின் முடிவான பதிலை அதன் முதல் மந்திரி, மிஸ்டர் சர்ச்சில், ஜூன் மாதம் 22-ந் தேதி பின்வருமாறு தெரிவித்தார் :—"ஹிட்லரோடாவது, ஹிட்லரின் கொள்ளைக்கூட்டத்தைச் சேர்ந்தவர்களோடாவது நாங்கள் சமாதான சம்பந்தமாக எந்தக் காலத்திலும் பேசவேமாட்டோம்."

6. ஜெர்மன் ஆகாய விமானப்படை பிரிட்டனுக்கு எதிராகப் போர்புரிந்து, முரட்டுத்தனமாக இராக்காலங்களில் வெடிகுண்டுகளைப் போட்டதுதவிர. பெருத்த வெற்றிகள் ஒன்றும் அடையவில்லை. இப்போது ஜெர்மன் ஆகாய விமானப்படை தன்னைப் பாதுகாத்துக்கொள்ளும் நிலைமைக்கு வந்துவிட்டது. ஆகாய விமானப் போரரங்கம் பிரிட்டனிலிருந்து வடமேற்கு பிரான்சுக்கும், ஜெர்மனிக்கும் மாற்றப்பட்டது. எந்த ஐந்தாம் படையாளரும் பிரிட்டனில் வேலை செய்யமுடியாது.

7. இந்தத் தாக்கும் முயற்சிகள் இதுவரைக்கும் பயனடையவேயில்லை. ஆனால் பிரிட்டனைத் தாக்கலாம் என்றபயம் இருக்கிறது. அதைவிட ஜெர்மனி அதிக்கிரமித்த பிரதேசங்களைப் பிரிட்டன் தாக்கலாம் என்ற பயம் அதிகமாக ஜெர்மனிக்கு இருக்கிறது.

8. சென்ற மகாயுத்தத்தில் நேசதேசத்தார்களுக்கு இத்தாலி எப்படி ஒரு தலைச்சுமையாய் இருந்ததோ, அதே மாதிரியாக இந்த யுத்தத்தில் இத்தாலி ஜெர்மனிக்கு ஒரு பெரும் பளுவாக இருக்கிறது. இத்தாலியின் சோமாலிலாந்து, அபிசீனியா, எரீட்ரியா, சிரியா முதலிய பிரதேசங்கள் இப்போது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத் துருப்புகளின் ஆதிக்கத்தில் இருக்கின்றன.

## 1940

### (இ) பொதுவாக உள்ள நிலைமை.

பொதுவாகக் கூறுமிடத்து, ஜெர்மனி ஒரு சிறு யுத்தத்திற்குத் தான் திட்டம் போட்டிருந்தது. அதனுடைய ஏற்பாடுகள் எல்லாம் வெற்றிகரமாக முடிந்தன; ஆனால் பிரிட்டனைப் பொறுத்தவரையில், ஜெர்மனி தன் காரியத்தைச் சாதிக்கமுடியவில்லை.

## 1941

### (இ) பொதுவாக உள்ள நிலைமை.

ஜெர்மனியின் குறுகிய கால திட்டங்கள் தோல்வியடைந்தன. பிரிட்டன் ஜெர்மனியை எதிர்த்துப் போராடிக்கொண்டிருக்கிறது. போராடிக்கொண்டிருக்கும்போதே, தன்னைப் பலப்படுத்திக் கொண்டு வருகிறது. மத்தியதரைக்கடலிலும், மத்திய கிழக்கரங்கத்திலும், இத்தாலி தோல்வியடைந்துவிட்டது. சூயஸ் கால்வாய்க்குச் செல்வதற்காக ஜெர்மானியர்கள் செய்த முயற்சியும் தோல்வியடைந்தது. இப்போது ஜெர்மானியர்கள் ரஷ்ய யுத்த அரங்கத்தில் தடுமாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பயந்து கொண்டிருந்த நிலைமை கடைசியில் வந்துவிட்டது: பிரிட்டிஷ் பொருளாதார முற்றுகையும், இரண்டு யுத்த அரங்கங்களில் ஒரே சமயத்தில் போர் செய்யவேண்டிய நிலைமையும் ஜெர்மனி சமாளிக்கவேண்டிய கஷ்டமான நிலையில் இருக்கிறது.

## 2. பிரிட்டன்.

### 1940 — (அ) பிரிட்டன் தனிப்பட்டு நிற்கிறது.

1. ஐரோப்பாவில் பிரிட்டனுக்கு ஒரு நேச நாடுகூட இல்லை. இங்கிலீஷ் கால்வாயின் அக்கரையிலுள்ள பிரெஞ்சுத் துறைமுகங்கள் ஜெர்மனியால் கைப்பற்றப்பட்டன.

2. 'பிரிட்டிஷ் எக்ஸ்பெடிஷனரி போர்ஸ்' என்ற பிரிட்டிஷ் பட்டாளம் நார்வே முதலிய இடங்களில் போர்புரிந்துகொண்டிருந்தது. அங்குள்ள யுத்த நிலைமை மாறியதும், அப்படை மிகுந்த கஷ்டங்களுக்கிடையில் தப்பித்துக்கொண்டு பிரிட்டனுக்கு வந்து சேர்ந்தது. ஆனால் யுத்த ஆயுதங்களைக்கொண்டு வரமுடியவில்லை. பிரிட்டிஷ் மக்களுக்கு இப்போது தான் நெருக்கடியான நிலைமையின் அபாயகரம் தெரிகிறது. ஆனால் நான்கில் ஒரு பாகம் தான் பட்டாளத்தில் சேர்ந்திருக்கிறது.

3. ஐரோப்பா பொருளாதார முற்றுகையிடப்பட்டது. ஆனால் அதைச் சரிவர நடத்துவதற்கு கப்பற்படைகள் அதிகமாக வேண்டியிருந்தது. அந்த நிலைமையில் அச்சு நாடுகள் பிரிட்டனைப் பொருளாதார முற்றுகையிட்டன.

4. ஜெர்மனியின் தாக்குதலைப் பிரிட்டன் தினந்தோறும் எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறது. ஆனால் பிரிட்டிஷ் ஆகாயவிமானப்படை எதிரிகளின் பலத்தை உடைத்துக் கொண்டேவருகிறது.

5. பிரிட்டிஷ் விமானப்படை, ஜெர்மன் விமானப்படையைவிட விமான ஓட்டிகளிலும், விமானங்களிலும் மிகச்சிறந்தது என்பது நிரூபித்துக்காட்டப்பட்டது. ஆனால், இரண்டிலும் ஜெர்மனி அதிகமான எண்ணிக்கை உடையது.

6. அமெரிக்கா பிரிட்டனுக்கு உதவி செய்வதற்குத் தயாராயிருக்கிறது; ஆனால் யுத்த சாமான்கள் உற்பத்திக்குச் சரியான முறையில் அமெரிக்கா ஒழுங்குபடுத்தும்படியான நிலைமையில் இல்லை.

### 1941 — (அ) ஒற்றுமை பலமளிக்கிறது.

1. நேச தேசத்தார்க்கு ஆதரவு: சுதந்தர பிரான்சு, ஹாலந்து, பெல்ஜியம், நார்வே, செக்கோஸ்லோவாக்கியா, போலந்து, கிரீஸ், யூகோஸ்லாவியா, ரஷ்யா, சீனா—இவைகளெல்லாம் சுதந்தர யுத்தத்தில் ஒன்று சேர்ந்திருக்கின்றன. ஆங்கிலக் கால்வாயின் அக்கரைத் துறைமுகங்களை ஜெர்மனி கைப்பற்றி தால், அட்லாண்டிக் கடல் யுத்தம் ஆரம்பித்தது. இந்த யுத்தத்தில் ஜெர்மனி இப்போது தோல்வியடைந்துகொண்டு வருகிறது.

2. பிரிட்டன் இதுவரையில் சமாளித்துக் கொண்டுவந்திருக்கிறது. இனிமேலும் அபாயம் இருக்கிறது. ஆனால் கூடிய சீக்கிரம் யுத்தத்தில் சேரவேண்டியவர்கள் எல்லோரும் யுத்த சன்னத்தர்களாய் விடுவார்கள். 1940-ம் வருஷத்தில் பிரிட்டன் மிகவும் அபாயகரமான நிலைமையில் இருந்தது; ஆனால் 1941-ம் வருஷத்தில் சாதாரணமாகப் போய்க்கொண்டிருக்கிறது. மற்ற யுத்த அரங்கங்களுக்கு வேண்டிய பிரிட்டிஷ் துருப்புகளை அனுப்பிக்கொண்டுவரும் நிலையில் இருக்கிறது.

3. ஐரோப்பாவின் பொருளாதார முற்றுகை தொடர்ந்து நடத்தப்படுகிறது. முன்பிருந்ததைவிட, அது இப்போது கடினமாக நடத்தப்படுகிறது. நாளுக்கு நாள் அதன் பலன்கள் ஜெர்மனியில் விளக்கமாகத் தெரியவருகின்றன. அச்சு நாடுகள் உண்மையில் பிரிட்டனைப் பொருளாதார முற்றுகையிடவில்லை. அவைகள் செய்ததெல்லாம் பிரிட்டனுக்கு வரும் சில சாமான்களை முழுகடித்ததுதான். பிரிட்டனின் போர் புரியும் திறமை அதிகரித்துக்கொண்டேயிருக்கிறது.

4. ஜெர்மனியின் தாக்குதல் பேச்சு காரியத்தில் கைகூடவில்லை. ஏனென்றால், பிரிட்டிஷ் ஆகாயவிமானப்படை இடைவிடாமல் கவனமாகப் பார்த்துக்கொண்டுவருவதால், எதிரிகள் தங்களுடைய ஏற்பாடுகளை முடிவு செய்வதற்கு முடியவில்லை.

5. பிரிட்டிஷ் விமானப்படை, ஜெர்மன் விமானப்படையைவிட உயர்ந்ததென்ற நிலைமை தொடர்ந்து காப்பாற்றப்பட்டு வருகிறது. இரண்டு படைகளுக்கும் எண்ணிக்கையில் உள்ள வித்தியாசம் விரைவாகக் குறைக்கப்படுகிறது. ஜெர்மன் விமானப்படை பிரிட்டனைத் தாக்கியதைவிடக் கடுமையாக, பிரிட்டிஷ் விமானப்படை ஜெர்மனியைத் தாக்குகிறது. இப்போது கடுமையாகத் தாக்கிக்கொண்டுவருவது பிரிட்டிஷ் ஆகாயவிமானப்படை தான்.

6. யுத்தத்தில் தீவிரமாக ஈடுபடுவது தவிர, மற்றெல்லாவித உதவியும் அமெரிக்கா பிரிட்டனுக்குக் கொடுத்துக்கொண்டு வருகிறது. பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட்டும் இதர அமெரிக்க அரசாங்கத் தலைவர்களும் பிரிட்டன் கட்டாயம் வெற்றி பெறும் என்று உறுதி கூறியிருக்கிறார்கள். தீவிரமாக அமெரிக்கா பிரிட்டனுக்கு உதவிய விவரங்களை இங்கு கூறலாம். 50 நாசகாரிக் கப்பல்களை அனுப்பியது, பிரிட்டனிடம் ஆதரவு காட்டிய பிரசிடெண்ட் ரூஸ்வெல்டை மீண்டும் அமெரிக்காவின் பிரதம தலைவராகத் தேர்ந்தெடுத்தது, அட்லாண்டிக் கடலில் அமெரிக்க கப்பற்படை கவனமாகப் பாதுகாப்பு வேலை செய்து வருவது, அமெரிக்கத் துருப்புகளை ஐஸ்லாந்துக்கு அனுப்பியது—இவைகளெல்லாம் அமெரிக்காக செய்த முக்கிய உதவிகளாகும். அமெரிக்கா அதிகரிக்கும்படியான யுத்த உதவியைப் பிரிட்டனுக்குச் செய்து கொண்டுவருவதும், தீவிரமாக யுத்தத்தில் ஈடுபடும்படியான நிலைமையில் இருப்பதும், ஜெர்மனிக்குப் பெரும் பயத்தை உண்டாக்கியிருக்கின்றன. அமெரிக்க தொழிற்சாலைகள் யுத்த ஆயுத உற்பத்தி வேலை செய்வதில் திறமையாக ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கின்றன.

### 1940 — (ஆ) எதிர்காலம்.

1. பிரிட்டன் இலையுதிர்காலம் வரைக்கும் சமாளித்துக்கொண்டால், ஹிட்லருடைய பெரிய சந்தர்ப்பம் போய்விடும்.

### 1941 — (ஆ) நடந்த விஷயம்.

1. ஹிட்லருடைய பெரிய சந்தர்ப்பம் போய்விட்டது. நீண்ட கால யுத்தத்திற்கு ஹிட்லர் தயாராகவேண்டும்.

## 1940

2. பிரிட்டனுடைய மக்கள் இதற்கு முன் எப்போதும் காட்டாத ஒற்றுமையுடன் கூடி விளங்குகிறார்கள்: கடைசி வரையில் எதிர்த்துப் போராடுவதென்று மன உறுதியுடன் இருக்கிறார்கள்.

3. பிரிட்டிஷ் மக்கள் எல்லோரும், பிரிட்டிஷ் விமானப்படையின் அரும் பெருஞ் செயல்களைக் கேட்டு உணர்ச்சி மிகுந்த உற்சாகமடைகிறார்கள்.

4. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் துரிதமாக யுத்த சன்னத்தமாய்க்கொண்டுவருகிறது.

5. பிரிட்டன் இன்னும் கடற்படையின் பலத்தினால் கடலில் ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

6. எகிப்து பாதுகாக்கப்பட்டது. ஆப்பிரிக்காவில் இத்தாலியர்கள் பல இடங்களிலிருந்து தாக்குவதற்கு ஏற்பாடு செய்கிறார்கள். பிரிட்டிஷ் சோமாலிலாந்து பிரதேசத்தை இழந்துவிட்டது தற்காலிகமாக என்று கருதப்படுகிறது.

### (இ) பொதுவாக உள்ள நிலைமை.

ஹாலந்து, பெல்ஜியம், பிரான்சு முதலிய தேசங்களில் ஜெர்மனி வெற்றி பெற்றதைப் பார்த்தால், பிரிட்டனுடைய எதிர்கால நிலைமை கவலைக்கிடமானதாய்த் தோன்றியது. ஆனால் பிரிட்டிஷ் மக்கள் சமாளித்துக் கொள்ளும் திறமையோடு இருந்தார்கள். பிரிட்டனின் கடற்படை பலம் அச்சுநாடுகளின் திட்டங்களை மாற்றிக்கொள்ளும் தன்மையுடையதாய் இருந்தது.

## 1941

2. பிரிட்டனுடைய மக்களும், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகளில் உள்ள மக்களும், நாஸிசத்தைக் கொன்று உலகத்தில் சுதந்தரத்தை நிலை நிறுத்தவேண்டுமென்று ஒற்றுமையுடன் போராடுகிறார்கள். பொருளாதார உலகத்துக்கு மத்திய ஸ்தானமாக இருந்த லண்டன் இப்போது உலக சுதந்தரப் போராட்டத்துக்கு மத்திய ஸ்தானமாக விளங்குகிறது.

3. பிரிட்டிஷ் விமானப்படையின் செய்கைகள் உலகத்திலுள்ள சுதந்தர மக்கள் எல்லோரையும் உற்சாகப்படுத்துகின்றன. பல யுத்த அரங்கங்களில் பிரிட்டிஷ் விமானப் படை போர் செய்துகொண்டு வருகிறது. எங்கு போர் புரிந்தாலும், விமானிகளின் திறமையும், விமானங்களின் உயர்வும் பலனளிக்கின்றன. முக்கியமாக, ஆப்பிரிக்காவில் நடந்த சண்டைகளில் இந்த விஷயம் நிரூபிக்கப்பட்டது.

4. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இன்னும் யுத்த சன்னத்தமாய்க்கொண்டிருக்கிறது. 1942-ம் வருஷ வசந்த காலம் வருவதற்குள் முழு அளவுக்கு யுத்த சன்னத்தமாய்விடும்.

5. அட்லாண்டிக் கடலில் மாத்திரம்தான் பிரிட்டனுடைய கடற்பலத்துக்குப் போட்டி ஏற்பட்டிருக்கிறது. பகைவர்கள் பகீரதப் பிரயத்தனம் செய்தபோதிலும், பிரிட்டனுடைய கடல் ஆதிக்கம் தலை சிறந்து விளங்குகிறதென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை.

6. ஆப்பிரிக்காவில் பிரிட்டிஷ் துருப்புகள் எதிர்த்துப் போர் புரிந்தது இத்தாலியர்களுக்கு ஆச்சரியத்தை விளைவித்தது. பிரிட்டிஷாரைவிட இத்தாலியர்கள் மூன்று பங்கு அதிகப்படியான எண்ணிக்கை உள்ளவர்களாயிருந்தாலும், பிரிட்டிஷார் எரீட்ரியாவைப் பிடித்துவிட்டு, அபிசீனியாவைக் கைப்பற்றி, பிரிட்டிஷ் சோமாலிலாந்து பிரதேசத்தைத் திரும்பப் பெற்றிருக்கிறார்கள். எகிப்தின் யுத்த அரங்கத்தில் எதிர்த்துப் போர்புரியும் திறமையுடன் பிரிட்டிஷ் துருப்புகள் விளங்குகின்றன. சிரியாவில் பிரிட்டிஷார் செய்த செய்கையும், இராக்கில் கலகத்தை அடக்கி நாட்டைத் தம் வசமாக்கியதும், இந்தியாவினுடைய அமைதியையும், மத்திய கிழக்காங்க அமைதியையும் காப்பாற்றின. பிரிட்டனுடைய எல்லைகள் இப்போது துருக்கியோடு சேர்ந்ததாக இருக்கிறது. அச்சுநாடுகள் பால்டிக் பிரதேசத்திலும், கிரீட்டிலும் ஆதிக்கம் பெற்றிருந்தாலும், பிரிட்டிஷ் கடற்படை மத்திய தரைக் கடலில் ஆதிக்கம் பெற்றிருக்கிறது.

### (இ) பொதுவாக உள்ள நிலைமை.

ரஷ்யாவுக்கு இனிமேல்தான் நெருக்கடியான நாள்கள் இருக்கின்றன. பிரம்மாண்டமான நாஸிகளின் யுத்த ஆயுதத்துக்கு அடிக்கடி தீங்கு நேர்ந்தபோதிலும், அது அதிகப்பழுதாகாமல் அப்படியே இருக்கிறது. இதை அடியோடு அழித்தாலொழிய, ஐரோப்பாவில் சமாதானம் ஏற்படாது. ஐரோப்பாவில் பிரிட்டனின் கடற்படைப்பலம் ஹிட்லரைச் சிறையாக்கியிருக்கிறது. பிரிட்டிஷ் விமானப்படை ஜெர்மன் பட்டணங்களையும், தொழிற்சாலைகளையும் வெடிகுண்டுகளால் தாக்கிக்கொண்டிரு கிறது. இருந்தபோதிலும், பிரிட்டன் சாவதானமாக இருப்பதற்கில்லை. இப்போது பிரிட்டன் அதிக யுத்த முஸ்தீப்புத் தளவாடங்களை வைத்துக்கொண்டு போர் புரிகிறது. அதற்குச் சுதந்தரத்துக்காகப் போராடும் நேசதேசத்தார்கள் உதவியாயிருக்கிறார்கள். எதிர்கால நோக்கம் கவலைக்கிடமானதல்ல. ஒரு அளவுக்கு உற்சாகமும் சந்தோஷமும் கூடக்கொள்ளலாம்.

# சர்ச்சில்—ரூஸ்வெல்ட் கூட்டறிக்கை

## பிரிட்டன்—அமெரிக்க யுத்த நோக்கங்களும், சமாதான நோக்கங்களும்

### ஹிட்லருடைய சமுதாயத் திட்டத்துக்கு ஆணித்தரமான பதில்

இந்த வருஷம் பிப்ரவரி மாதம், அமெரிக்கத் தலைவர் பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட், பிரிட்டிஷ் முதல் மந்திரி, மிஸ்டர் சர்ச்சிலைக்கண்டு யுத்த நிலைமையைப்பற்றிப் பேசவேண்டும் என்ற எண்ணங்கொண்டார். அப்போது கிரீஸிலும், கிரீட்டிலும் யுத்தம் நடந்துகொண்டிருந்ததால், இந்த முக்கியமான சந்திப்பு ஏற்படுவதற்கு அவகாசமில்லை. யுத்தத்தைப் பற்றியும் சமாதானத்தைப்பற்றியும் உள்ள பிரச்சினைகள், பிரிட்டனுக்கு அமெரிக்கா இன்னும் எந்த வழிகளில் உதவி செய்வது, யுத்தம் முடிந்த பிறகு ஏற்படும் சமாதானம் எப்படிப்பட்டதாயிருக்க வேண்டும், ஜெர்மனியின் ஆதிக்கத்துக்குட்பட்ட நாடுகளில் உள்ள மக்களின் நிலைமை—இவைகளைப் பற்றி எல்லாம் பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட், மிஸ்டர் சர்ச்சிலுடன் கலந்து பேச விரும்பினார். கடைசியில் இந்த மாதம் முதல் வாரத்தில் இருவரும் சந்தித்தார்கள். அவர்கள் சந்திக்கும்போது வெளி உலகத்தில் யாருக்கும் விஷயம் தெரியாது. அட்லாண்டிக் கடலில் அவர்கள் சந்தித்துப்பேசினார்கள். சில நேரம் ஒரு பிரிட்டிஷ் யுத்தக்கப்பலிலும், சில நேரம் ஒரு அமெரிக்க யுத்தக்கப்பலிலும் சம்பாஷணை நடந்தது. சம்பாஷணைகளின் முழு விவரங்கள் இன்னும் வெளியிடப்படவில்லை. ஆனால் யுத்தத்தைப்பற்றியும், சமாதானத்தைப்பற்றியும், அமெரிக்காவுக்கும், பிரிட்டனுக்கும் உள்ள நோக்கங்களைப்பற்றி, ஒரு அதிமுக்கியமான அறிக்கை வெளியிடப்பட்டது. அந்த அறிக்கை கூறுவதாவது:—

"அமெரிக்க ஐக்கிய மாகாணங்களின் தலைவரும், பிரிட்டிஷ் அரசாங்கத்தின் முதல் மந்திரி, மிஸ்டர் சர்ச்சிலும், ஒன்று சேர்ந்து தங்களுடைய அரசாங்கங்களின் சார்பாக, உலகத்தின் எதிர்கால வாழ்க்கை எந்தக்கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டிருக்க வண்டும் என்பதைப்பற்றி, தங்கள் தேசங்களின் பொதுக்கொள்கைகளை அறிவிக்கிறார்கள்.

"முதலாவது, வேறு நாடுகளைப் பிடிக்கவேண்டும், அல்லது அவைகளின் பொருள்களைக் கைப்பற்ற வேண்டும் என்ற எண்ணம் பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் இடையாது.

"இரண்டாவது, அந்தந்த நாட்டு மக்களின் சுதந்தர இச்சையின்படியல்லாது, தேச அமைப்பை

## பிரிட்டனின் ராக்ஷச பீரங்கிகள்



இந்த 12 அங்குல ராக்ஷச பீரங்கிகள் ரயில்வேக்களின்மீது பொருத்தப்பட்டுள்ளன. இந்த பீரங்கிகள் ஒவ்வொன்றும் ஒரு தடவையில் ⅓ டன் எடையுள்ள குண்டை கக்குகின்றன. இவைகள் எதிரிகளைச் சுடுவதற்குச் தயாராகக் காத்துக்கொண்டிருக்கின்றதைப் படத்தில் காணலாம்.

மாற்றும் மாறுதல்களை, பிரிட்டனும் அமெரிக்காவும் விரும்பவில்லை.

"மூன்றுவது, எல்லா மக்களும் எந்த அரசியல் திட்டத்தின் கீழ் வாழவேண்டும் என்று தெரிந்தெடுக்க உரிமை உள்ளவர்கள்; அந்த உரிமையை இந்த இரு நாடுகளும் நன் மதிப்போடு ஒப்புக்கொள்ளுகின்றன. எந்த நாடுகளிடமிருந்து சுதந்தர உரிமைகளும் சுயராஜ்யத் தன்மையும் வலிமையினால் பிடுங்கப்பட்டனவோ, அவைகளைத் திருப்பி அந்த நாடுகள் பெறவேண்டுமென்று பிரிட்டனும் அமெரிக்காவும் விரும்புகின்றன.

### பொருளாதார நல் வாழ்வு.

"நான்காவது, இப்போதிருக்கும் பொருளாதார ஒப்பந்தங்களுக்கு மதிப்புக் கொடுத்து பொருளாதார நல் வாழ்வுக்கு அவசியம் வேண்டியிருக்கும்படியான பக்குவப்படுத்தாத உலகப் பொருள்களை, எல்லா நாடுகளும், அவைகள் சிறியவையாயிருந்தாலும் சரி பெரியனவாயிருந்தாலும் சரி, வெற்றி பெற்ற நாடாயிருந்தாலும் சரி, தோல்வியடைந்த நாடாயிருந்தாலும் சரி, சம நிலையில் வியாபாரம் செய்வதற்கு, பிரிட்டனும் அமெரிக்காவும் முயற்சி செய்யும்.

"ஐந்தாவது, தொழிலாளர்களின் நிலைமையை உயர்த்தி, அவர்களுக்குச் சமுதாயத்திலும் பொருளாதாரத்திலும் அமைதியான வாழ்வும் முன்னேற்றமும் உண்டாக்குவதற்காக எல்லா நாடுகளும் ஒன்று சேர்ந்து பூரணமாக ஒத்துழைக்கும் நிலைமையை ஏற்படுத்த பிரிட்டனும், அமெரிக்காவும் விரும்புகின்றன.

"ஆறுவது, நாஜிகளின் கொடுங்கோல் அடியோடு ஒழிக்கப்பட்ட பிறகு, ஒரு புதிய சமாதானம் ஏற்படுத்தப்படும். எல்லா மக்களும் தங்களுடைய நாட்டு எல்லைகளுக்குள் பயமில்லாமல் நிம்மதியாக வாழ வேண்டும்; எல்லா நாட்டு மனிதர்களும் பயத்திலிருந்தும், வறுமையிலிருந்தும் விடுபட்டு அவரவர்கள் வாழ்க்கையை நடத்தவேண்டும். அப்படிப்பட்ட சமாதானத்தை ஏற்படுத்த அமெரிக்காவும், பிரிட்டனும் முயற்சி செய்யும்.

"ஏழாவது, அப்படிப்பட்ட சமாதானம் எல்லா மனிதர்களையும், கடல்களையும், சமுத்திரங்களையும் தாண்டி எங்கு வேண்டுமென்றாலும், யாதொரு தடையுமின்றி, செல்லுவதற்கு உதவியாயிருக்க வேண்டும்.

"எட்டாவது, உலகத்திலுள்ள எல்லா தேசத்தார்களும், ஆத்மார்த்த காரணங்களுக்காகவும், அனுபவபூர்வமான காரணங்களுக்காகவும் பலாத்காரத்தை உபயோகித்துக் காரியங்கள் சாதிப்பதை விட்டுவிடவேண்டுமென்று பிரிட்டனும், அமெரிக்காவும் நம்புகின்றன. தரைப்படை, கடற்படை, ஆகாய விமானப்படை முதலியவைகளை வைத்துக்கொண்டு இதர நாடுகளை அதிக்கிரமிக்கும் வல்லரசுகளை, நிரந்தரமான சமாதானம் நிலைபெறும்வரையில், நிராயுதபாணிகளாக ஆக்குவது மிகவும் அவசியம். இல்லாவிட்டால், எதிர் காலத்தில் சமாதானத்தை நிலைநிறுத்தவேமுடியாது சமாதானத்தை விரும்பும் மக்கள் ராணுவத்தினால் ஏற்படும் வரிப் பளுவினால் கஷ்டப்படுவதைக் குறைப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை எல்லாம் பிரிட்டனும் அமெரிக்காவும் செய்யும்."

### எல்லா மக்களுக்கும் சுதந்தரம்.

பிரிட்டனின் உதவி முதல் மந்திரியாகிய மிஸ்டர் ஆட்லீ, இந்த அறிக்கையை ஆகஸ்ட்டுமீ 14உ ஒரு ரேடியோ பேச்சின் மூலமாக வெளியிட்டார். அடுத்த நாள் அதன் கொள்கைகளை விவரித்துக் கூறினார். "தொழிற் கட்சியைச் சேர்ந்த நாங்கள் எந்த சுதந்தரம் எங்களுக்கு வேண்டுமென்று கேட்கிறோமோ, அதேசுதந்தரத்தை ஆசியா மக்கள், ஆப்பிரிக்க மக்கள் உள்பட எல்லோருக்கும் கொடுக்க வேண்டுமென்று கூறுகிறோம்" என்று அவர் சொன்னார். மேலும் அவர் கூறியதாவது;—"தொழிற்கட்சியைச் சேர்ந்த நாங்கள் வெள்ளை நிற வகுப்பினர் கருப்பு நிறத்தார்களுக்குச் செய்த தவறுகளை உணர்ந்திருக்கிறோம். குடியேற்ற நாடுகள், கீழ்ப்பட்ட மக்கள வசிக்கும் இடங்கள் என்ற பழைய எண்ணம் மாறிக்கொண்டு வந்ததைக்கண்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். குடியேற்ற நாட்டு மக்கள் உழைத்து மற்றவர்களுக்காகச் செல்வம் உண்டாக்க வேண்டும் என்ற எண்ணம் போய், நியாயமானதும் கௌரவமானதுமான எண்ணங்கள் தோன்றியிருக்கின்றன. நேற்றைய தினம் நான் வெளியிட்ட அறிக்கை உலகத்திலுள்ள எல்லா மக்களுக்கும் பொருத்தமானது என்று நம்புகிறேன்."

சர்ச்சில்—ரூஸ்வெல்ட் கூட்டறிக்கை சுதந்தரம் விரும்பும் நாடுகளாகிய பிரிட்டன், அமெரிக்கா, ஜெர்மனி அதிக்கிரமித்த நாடுகள், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய நாடுகள், இந்தியா, பிரிட்டிஷ் குடியேற்ற

நாடுகள் முதலியவைகள் எல்லாவற்றிலும் பொது மக்களால் வரவேற்கப்பட்டிருக்கின்றன. ஆனால் ஜெர்மனியார்களுக்கு மாத்திரம் இது பிடிக்கவில்லை. ஏனென்றால், ஜெர்மனியின் கொடுங்கோலின் கீழ் கஷ்டப்படும் மக்களுக்கு இந்த அறிக்கை ஆறுதலையும், நம்பிக்கையும், மனவுறுதியையும் கொடுக்கிறது. இந்த அறிக்கை ஹிட்லருடைய புதிய சமுசாயத்திட்டத்துக்கு ஆணித்தரமான பதில் அளிப்பதாகும். அதிக்கிரமித்த நாடுகளுக்குச் சுதந்தரமும், யுத்த ஆயுத ஒழிப்பு நிலைமையும், இனிமேல் இப்படிப்பட்ட கொரே யுத்தம் நடக்காத ஏற்பாடும், இவ்வறிக்கையில் காணக்கிடக்கும் வாக்குறுதிகள்.

# வாரச் செய்திக் குறிப்புகள்.

### 1. ஜெர்மனியிலும், பிரிட்டனிலும், இதர இடங்களிலும், ஆகாய விமானப் போர்.

சென்ற திங்கட்கிழமை இரவு, மேற்கில் பிரிட்டிஷ் ஆகாயப்படையும், வடகிழக்கில் ரஷ்ய ஆகாயப் படையும், ஜெர்மனியைத் தாக்கின என்று ஜெர்மன் செய்தி ஸ்தாபனம் கூறுகிறது.

ஜெர்மன் கடற்படையின் தளகர்த்தர் பதவிவகித்திருந்த ஒரு ஜெர்மன் உத்தியோகஸ்தர், பிரெமன் (ஜெர்மனி) துறைமுகத்தில் இறந்துவிட்டார் என்று ஜெர்மன் ரேடியோ தெரிவிக்கின்றது. 27 வருஷகாலமாக அவர் தளகர்த்தராயிருந்தாராம். பிரிட்டிஷ் ஆகாயப்படை சென்ற ஞாயிற்றுக்கிழமை பிரெமன் துறைமுகத்தைத் தாக்கியதும், பிறகு தளகர்த்தர் இறந்தார் என்று தெரிவிக்கப்பட்டதும் ஒன்றுகொன்று சம்பந்தப்பட்டதாயிருக்கலாம் என்று நினைப்பதற்கு இடமுண்டாகிறது.

காலநிலை பிரதிகூலமாயிருந்தபோதிலும், ரைன்லாந்திலும், ரூர் பிரதேசத்திலும் பிரிட்டிஷ் ஆகாய விமானப்படை குண்டுகள் போட்டுத்தாக்கியது. கொலோன், டூசல்தார்ப், டூய்ஸ்பெர்க், ஆகிய விடங்களும் பலமாகத் தாக்கப்பட்டன. ராட்டர்டாம், ஆஸ்டெண்டு கப்பற்சாலைகளும் தாக்கப்பட்டன. நம்முடைய விமானங்களில் 13 காணப்படவில்லை.

வட பிரான்ஸில் செயின்ட் ஓமருக்கு அருகிலுள்ள ஆகாய விமானதளமும், ரயில் போக்குவரத்து இடங்களும் குண்டுகள் போட்டுத் தாக்கப்பட்டன. 19 விரோதி விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. நம்முடைய விமானங்களில் 4 காணப்படவில்லை. பிரெஸ்ட் கப்பற்சாலைகள்மீதும் குண்டுகள் போடப்பட்டன. பொலோன் கப்பற்சாலைகளைத் தாக்கும்போது 13 எதிரிவிமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. நம்முடைய விமானங்களில் 3 காணப்படவில்லை. ஹரிகேன், ஸ்பிட்பைர் விமானங்கள் பெருவாரியாக வட பிரான்சின் மீது பறந்துசென்று குண்டுகளைப்போட்டன. லில்லியிலுள்ள கைத்தொழில் லட்சியங்கள் மீதும், அகஸ்டாபட்டணத்தின்மீதும் குண்டுகள் போடப்பட்டன.

விரோதி தாக்குதல்கள் சிறிய அளவில், ஸ்காட்லண்டின் கிழக்குக் கடற்கரையோரத்தில் நடந்தனவென்று ஒரு அறிக்கை கூறுகின்றது. சிலவிடங்களில் குண்டுகள் போடப்பட்டன. வட கிழக்கு ஸ்காட்லண்டில் ஒரு இடத்தில் சிறிது சேதம் உண்டாயிற்று. அங்கே இரண்டு இடங்களில் சிலர் கொல்லப்பட்டனர்.

சென்ற ஞாயிற்றுக்கிழமை இரவு வட கிழக்கு இங்கிலாந்தில் ஹல் என்ற பட்டணத்தின் பலவிடங்களில் விரோதிகள் குண்டுகளைப் போட்டதினால், பொருட்சேதமும், உயிர்ச்சேதமும் சிறிது உண்டாயிற்றென்று கூறப்படுகிறது.

சென்ற நான்கு வாரங்களாக மொத்தம் சுமார் 300 ஜெர்மன் வெடிகுண்டு விமானங்கள் பிரிட்டன் கடற்கரையைத்தாண்டிச் சென்றிருக்கின்றன என்று அதிகார பூர்வமாக அறிவிக்கப்படுகிறது. ஜூலை மாதம 26-ம் தேதி முழுகடிக்கப்பட்ட 'ஹார்ன் ஷெல்' என்ற பிரிட்டிஷ் டாங்கர் கப்பலிலிருந்து 15 பேர்கள் பிரேசில் தேசத்துக் கப்பலால் காப்பாற்றப்பட்டனர். இவர்கள், அட்லாண்டிக் கடலில் வட ஆப்பிரிக்காவிற்கு மேற்கிலுள்ள மெடீரா தீவிற்கு 300 மைல் மேற்கே கண்டுபிடிக்கப்பட்டுக் காப்பாற்றப்பட்டார்கள். இன்னும 12 பேர் பத்துநாட்களுக்குப்பிறகு போர்ச்சுகீஸ் தேசத்துக் கப்பலால் காப்பாற்றப்பட்டு வடமேற்கு ஆப்பிரிக்காவிற்கு அருகிலுள்ள செயின்ட் வின்செண்ட், கேப்வெர்டி தீவுகளில் இறக்கப்பட்டனர்.

### 2. ஆப்பிரிக்காவும், மத்தியதரைக் கடலும்.

மத்திய தரைக்கடலிலுள்ள சிசிலி தீவில் கடானியா துறைமுகம் பிரிட்டிஷ் விமானப்படையால் பலமாகத் தாக்கப்பட்டது. பெர்கா, பெனீனு ஆகாய தளங்களும், பார்டியா, பெங்காசி துறைமுகப் பட்டணங்களும் தாக்கப்பட்டன என்று பிரிட்டிஷ் ஆகாய படையின் மத்திய கிழக்கரங்க அறிக்கை கூறுகின்றது. கடானியா, சிரகியூஸ், பார்டியா, டெர்னு, பெங்காசி இடங்களை பிரிட்டிஷ் விமானப் படை தாக்கியிருப்பது இத்தாலிய அறிக்கையில் ஒப்புக்கொள்ளப்பட்டது. சென்ற வாரத்தில் டொப்ரூக், லிபியா நிலைமையில் மாறுதலொன்றுமில்லையென்று ஒரு அறிக்கை கூறுகிறது.

பிரிட்டிஷ் விமானப்படை பார்டியாவைத்தாக்கும்போது சுங்ககட்டடத்தின்மேலும், மோட்டார் தொழிற்சாலைகள்மீதும் குண்டுகள் குறிதவருமல் போட்டன.

மால்டா தீவு நான்கு தடவைகள் தாக்கப்பட்டதென்றும், சொற்பசேத முண்டாயிற்றென்றும் பிரிட்டிஷ் விமானப்படை அறிக்கை கூறுகிறது.

வட ஆப்பிரிக்காவிலுள்ள தென் ஆப்பிரிக்கப்படைகளை மூன்ருவது தடவை பார்ப்பதற்காகவும், ஜெனரல் சர் ஆக்கின்லெக் என்பவரைக்கண்டு பேசுவதற்காகவும், தளபதி ஸ்மட்ஸ் சென்ற வாரம் வட கிழக்கு ஆப்பிரிக்காவிலுள்ள கெய்ரோ பட்டணத்திற்கு ஆகாய விமான மூலமாக பறந்து சென்றிருக்கிருர் என்று அதிகார பூர்வமாக ஒரு அறிக்கை கூறுகிறது.

அபிஸீனிய சக்ரவர்த்தினி, தன்னுடைய இளைய பெண்ணுகிய இராஜகுமாரி ட்ஸாஹையுடன் இங்கிலாந்தைவிட்டுப் புறப்பட்டவர், கூடிய சீக்கிரம் அடிஸ் அபாபாவிற்குப் போய்ச் சேருவார் என்று தெரிகிறது.

### 3. அமெரிக்காவும், அட்லாண்டிக் கடலும்.

அட்லாண்டிக்கடலில் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்டைச் சந்தித்துப் பேசிவிட்டு மிஸ்டர் சர்ச்சில் ஐஸ்லாந்திற்குச்சென்று அங்குள்ள பிரிட்டிஷ், அமெரிக்க துருப்புகளைப் பார்வையிட்டு செவ்வாய்க்கிழமை சௌக்கியமாக லண்டன் வந்து சேர்ந்தார். இவர் வருகிற ஞாயிற்றுகிழமை ரேடியோ மூலமாக அந்த சந்திப்பைப்பற்றிப் பேசுவார் என்று தெரிகிறது. அமெரிக்காவில், 28-வயதிற்கு மேற்பட்டவர்களை ராணுவ சேவைக்குச் சேர்த்துக்கொள்ள வேண்டியதில்லை என்ற மசோதாவில் பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் கையெழுத்துப்போட்டிருக்கிருர் என்று தெரிகிறது.

பிரிட்டனுக்காக அமெரிக்காவில் கட்டப்பட்ட 'ஓஷன் வாங்குவார்ட்' என்ற கப்பலை வெள்ளோட்டத்திற்கு விடும்போது, "வருகிற இரண்டு வருடங்களில் நாளொன்றுக்கு இரண்டு கப்பல்வீதம் அமெரிக்கா பிரிட்டனுக்காகச் செய்யும்," என்று அமெரிக்க உதவி அட்மிரல் லாண்ட் கூறினுர்.

ரூஸ்வெல்ட்—சர்ச்சில் சந்திப்பிற்குப் பிறகு வாடகை கடன் திட்டத்தின்கீழ் 70 கோடி டாலர்கள் ஒதுக்கிவைக்க அமெரிக்க சபையின் அனுமதி கேட்கபட்டிருக்கின்றது.

கானடாவின் யுத்த செலவு முப்பதிலிருந்து நாற்பது லக்ஷ டாலர்கள் தினம் செலவாகின்றதென்று கானடா பொக்கிஷ மந்திரி கூறுகின்ருர். ஜூலையில் முடிய செலவான தொகை 10,80,000 டாலர்கள்.

அமெரிக்க ராணுவ படைகளின் முன்பாக சமீபத்தில் செய்த பிரசங்கத்தில், அமெரிக்க யுத்த மந்திரியாகிய, மிஸ்டர் ஸ்டிம்ஸன் கூறியதன் சாரம் பின்வருமாறு :—

"ஆப்பிரிக்காவில் பெருத்த படையெடுப்பை ஜெர்மனி செய்ய முயற்சிக்குமென்பதை நாம் நம்புவதற்குத்தகுந்த காரணமிருக்கின்றது. டாகாரை, ஜெர்மனி உபயோகிக்க கொடுத்துவிடவேண்டுமென்று, பாரிஸ் பத்திரிகைகள் விஷி சர்க்காரை வெளிப்படையாக கேட்கின்றன. நம்முடைய தரைப் படையும், ஆகாயப்படையும், விரோதியை எல்லா பக்கத்திலும், எதிர்க்கத் தயாராயிருக்கவேண்டும்."

தென் அமெரிக்காவில் விளைபொருள்கள் விசேஷமாக உள்ள நாடுகளில் நாஸிகள் செய்யும் விஷ

மங்களை அடக்க என்ன ஏற்பாடு செய்திருக்கின்றீர்கள் என்று பத்திரிகைக்காரர்கள், மிஸ்டர் கார்டல் ஹல்லைக் கேட்டதற்கு, அவர், நம்முடைய தடை முயற்சிகள் விரோதிகளுக்குத் தெரியப்படுத்தக்கூடாதாகையால், ஒன்றும் வெளிப்படுத்த முடியாதென்று கூறினர்.

ஜப்பானிலுள்ள 100 அமெரிக்கர்களில், அமெரிக்க உத்தியோகஸ்தர்கள் தவிர, மற்ற அமெரிக்கர்களை அமெரிக்காவிற்குப் போகும் பிரஸிடெண்ட் கூலிட்ஜ் என்ற ஸ்டீமரில் ஏற்றி அனுப்ப முடியாதென்று ஜப்பானிய சர்க்கார் தெரிவித்திருக்கின்றனர்கள். ஷாங்கை (சீன தேசம்) துறை முகத்தை விட்டுப் புறப்பட்ட அந்த ஸ்டீமர் (நீராவிக்கப்பல்) ஜப்பானிய துறைமுகத்திற்குப் போகாமல் நேராக வட அமெரிக்காவிலுள்ள சான்பிரான்ஸிஸ்கோ துறைமுகத்திற்குப் போய்ச்சேருமென்று தெரிகிறது.

அமெரிக்காவில் மோட்டார் பெட்ரோல் குறைப்புத் திட்டம் அமுலிலிருந்து வருகின்றது. இதனல் தனித்தனி மோட்டார்காருக்கும் அனுமதிச்சீட்டு கொடுப்பதற்குப்பதிலாக பெட்ரோல் சப்ளை இடங்களுக்கு 100-க்கு 10 விகிதம் பெட்ரோல் குறைவாகவே கொடுக்கப்பட்டிருக்கின்றது. அமெரிக்க பிரஞ்சு சம்பந்தங்களைப்பற்றி வெளிப்படையாக கூறுவதற்குமுன்பு, விஷியிலிருக்கும் அமெரிக்க ஸ்தானிகாகிய அட்மிரல் லீகியிடமிருந்து, தான், சமாச்சாரம் எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாக அமெரிக்க அரசியல் மந்திரி மிஸ்டர் கார்டல் ஹல் தெரிவித்தார்.

800 ஆயிரம் டன் எடையுள்ள யுத்த சாமான்களை அமெரிக்கா, சீனவிற்கு பர்மா ரோட் மூலமாக 'சப்ளை' செய்திருக்கின்றது. யுத்தம் முடிந்த பிறகும் இவ்விதமே உதவி செய்வதாக அமெரிக்கா தெரிவித்திருக்கின்றது.

ஜமேகாவில் அமெரிக்கா கடல் தளங்களை அதிக விரைவாக கட்டிக்கொண்டு வருகின்றது.

அமெரிக்காவிற்கு டாங்கி கப்பல்கள் முதலியவைகள் செய்ய 75 லட்ச டாலர்கள் ஒதுக்க, அமெரிக்க சபை ஒப்புக்கொண்டிருக்கின்றது.

மத்திய கிழக்கு அரங்கத்திலும், மேற்கு ஆப்பிரிக்காவிலும் உள்ள பிரிட்டிஷ் துருப்புகளின் உபயோகத்திற்காக ஆகாய விமானங்கள் துரிதமாக அனுப்புவதற்கான ஏற்பாடுகளை பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட் செய்து கொண்டிருக்கின்றனர். கொண்டுபோகும் வழி மிகவும் இரகசியமாயிருக்கின்றது.

**4 பால்கன்ஸ், துருக்கி, சிரியா, ஈரான் முதலியன.**

சிரியாவிலுள்ள விஷி துருப்புகள் சமாதான உடன்படிக்கைப் பிரகாரம் சுயேச்சை பிரஞ்சு துருப்புகளைச் சேரவேண்டும் என்பதும், விஷியினுடைய ஜெனரல் டென்ட்ஸ் விடுதலையடையாமலிருப்பதும் சரியல்லவென்று விஷி சர்க்கார் கண்டனம் செய்திருக்கின்றனர்களென்று ஒரு ரேடியோ செய்தி கூறுகின்றது. பிரிட்டிஷ் கைதிகளெல்லாரையும் விடுவிக்கும் வரையில், விஷி ஜெனரல் விடுதலையடையமாட்டார் என்று பிரிட்டன் தெரிவித்திருக்கின்றது.

**5. கப்பல் நிலைமை.**

விரோதியினுடைய 5,000 டன் எடையுள்ள சப்ளை கப்பலும், 1,000 டன் எடையுள்ள மற்றொரு கப்பலும், டச்சு சப்மரீன் கப்பலால் தாக்கப்பட்டு முழுகடிக்கப்பட்டது. டச்சு சப்மரீன்களால் மத்தியதரைக் கடலில் முழுகடிக்கப்பட்ட விரோதி கப்பல்களின் மொத்த எடை 26,000 டன்களாகின்றது. 3,667 டன் எடையுள்ள "நார்டெனி" என்ற ஜெர்மன் சாமான் கப்பலும், 4,272 டன் எடையுள்ள ஸ்டில்லா என்ற இத்தாலிய சாமான் கப்பலும் வழிமறித்துப் பிடிக்கபட்டன. ஜெர்மன் கப்பலில் 1,500 டன் ரப்பரும், 250 டன் சிற்றாமணக்குக் கொட்டையும், 97 டன் விளக்கெண்ணெயும், 620 டன் தோல்களும் இருந்தன. இந்த கப்பல் பாரா பட்டணத்தில் (பிரேசில் தேசம்) 4 மாத காலமாகக் காத்திருந்து பிறகு புறப்பட்டதாம்.

நீர்க்குண்டுகளை உடைக்கும் பிரிட்டிஷ் கட்பல் ஒன்று முழுகடிக்கப்பட்டது என்றுகடற்படைஇலாகாகூறுகிறது

**6. தூரக் கிழக்கு அரங்கம்.**

ஜப்பானிய துருப்புகள் பர்மா, தாய்லாந்து எல்லைகளில் அதிகமாக சேர்த்துவைக்கப்பட்டிருக்கின்றன. சிங்கப்பூரும் யுத்தத்தை எதிர்ப்பார்த்த வண்ணமாயிருக்கிறது. ஜப்பானைச்சுற்றி ஆங்கிலோ-அமெரிக்க முற்றுகையிடப்பட்டிருப்பதாகவும், அதைக்கண்டித்து அந்த இரண்டு தேசங்களையும் தூற்றி ரேடியோ மூலமாக ஜப்பான் பலபாஷைகளில் பிரசாரம் செய்து கொண்டேயிருக்கின்றது.

தாய்லாந்துக்காரர்கள் ஜப்பானியர்களுக்குத் தாழ்மையாக வணங்கி தேசத்தை விட்டுக்கொடுக்கமாட்டார்கள். அவசியமேற்பட்டால் சண்டை செய்யப் பின் வாங்கமாட்டார்கள்.

மலேயாவைச் சேர்ந்த ஜொஹூரிலிருக்கும் ஜப்பானியர்கள் 14 நாட்களுக்குள் வெளியேறவேண்டுமென்று நோட்டீஸ் மூலமாகத் தெரிவிக்கப்பட்டது. அவர்கள் 50 பேருக்கு மேலிருக்குமென்றும், பெரும்பாலோர் சுரங்க முதலாளிகளும், ரப்பர் எஸ்டேட் சொந்தக்காரர்களாயுமிருக்கின்றனர்.

தாய்லாந்து மந்திரி, ஜப்பானிய அயல்நாட்டு மந்திரியாகிய அட்மிரல் தோயாடாவுடன் தற்கால நிலைமை சம்பந்தமான விஷயங்களை கலந்து பேசினர்.

"ஜப்பானிய உணவு வகைகள் மிகவும் குறைந்து கொண்டே வருகின்றன. ஜப்பானிய அரிசியும் மட்டமானதாயிருக்கின்றது; தாய்லாந்து அரிசி சாப்பாடு நன்ருகச் சாப்பிடவேண்டும்" என்று ஜப்பானிலிருந்துவந்த ஒருவர், ராய்ட்டர் நிருபரிடம் கூறினர்.

"மலேயாவில் நாம் மிகவும் பலம் பொருந்தியவர்களாயிருக்கின்றோம். சிங்கப்பூரைப் பிடிக்கும் எந்த முயற்சியும் பிரமாதமானதாகவேயிருக்கும்" என்று, சென்ற 2½ வருஷகாலமாக சீனவிலுள்ள பிரிட்டிஷ் துருப்புகளுக்குத் தளகர்த்தராக இருக்கும் மேஜர் ஜெனரல் கிராசெட் கூறினர்.

சைகோனிலிருந்து சிங்கப்பூருக்குவந்து சேர்ந்த 30 பிரிட்டிஷ்காரர்கள் இண்டோ-சீனவில் சமீபத்தில் வந்த ஜப்பானிய துருப்புகள் 80,000த்திலிருந்து 1,00,000 பேர் இருக்குமென்றும் யுத்த ஆரோகணிப்பு சாமான்கள் 1,60,000 பேர்களுக்குப் போதுமானதாயிருக்கின்றதென்று தெரிவித்தார்கள்.

ஜப்பான் இண்டோ-சீனவிற்குப் போன காரணம் ரஷ்யாவைத்தாக்கும்போது பிரிட்டனும், அமெரிக்காவும் உதவிக்குவருவதைத் தடுப்பதற்கே என்று சீனவட்டாரங்கள் கூறுகின்றன. இதற்காக ஜப்பானிய துருப்புகள் 2,00,000 பேர் வேண்டியதாயிருக்குமென்றும், இண்டோ-சீனவில் இப்போது 50,000 பேர்தானிருக்கின்றனர் என்றும் கூறப்படுகின்றது.

**7. விஷி.**

அட்மிரல் டார்லான் பாரிஸ் நகரத்திற்குச் சென்றிருக்கிருர் என்று ஸ்விஸ் தேச ரேடியோ கூறுகிறது.

ஒரு புதிய பிரகடனத்தின்படி, பிரான்ஸிலுள்ள ஒவ்வொருவரும் பிரான்ஸ் தேசத்திற்குப் பதிலாக மார்ஷல் பீதானுக்கே உண்மையுடன் ஒத்துழைப்பதாக பிரமாணிக்கம் செய்யவேண்டியதாயிருக்கிறது.

**8. ஜெர்மன் அதிக்கிரமத்திலுள்ள நாடுகள்.**

அல்பேனியாவில் ஒரு புரட்சி யேற்பட்டிருப்பதைக் கண்டு இத்தாலியர்கள் பீதியடைந்திருக்கின்றனர். கிரேக்க, யுகோஸ்லாவிய தேச கொரில்லா (குரங்கு) படைகள் இதில் பங்கெடுத்துக்கொண்டிருக்கின்றன என்று கூறப்படுகிறது. அல்பேனியர்கள் சிறு கூட்டங்களாகச் சேர்ந்து இரவில் இத்தாலியர்களைத் தாக்குகின்றனர். இவர்கள் போராட்டில் நடந்த இரவு சண்டையில் ஒரு இத்தாலிய உத்தியோகஸ்தரையும் 25 சிப்பாய்களையும் கைதியாக்கி இருக்கின்றனர்கள்.

பெல்ஜியத்தில் 34 வயதுள்ள ஜூன் டார்பாய்ண்ட் என்ற பெண்மணியும் அவளுடைய 70 வயதான தகப்பனரும் 64 வயதான தாயாரும் பிரிட்டிஷ் விமான ஓட்டிக்கு புகலிடம்கொடுத்து சவரக்ஷணைசெய்து வந்ததினல் ஜெர்மன் ராணுவ கோர்ட்டாரால் மரண தண்டனை விதிக்கப்பட்டார்கள்.

**9. நடுநிலைமை நாடுகள்.**

அர்ஜெண்டீன (தென் அமெரிக்கா), இந்தியாவிலிருந்து சணல் கொண்டுபோவதற்காக நான்கு அர்ஜெண்டீன கப்பல்களை அனுப்பத் தீர்மானித்திருக்கின்றது.

**10. ரஷ்யாவும், ஜெர்மனியும்.**

ரஷ்யாவில், நவ்கோரட், கோமெல் பகுதிகளில் யுத்தம் மிகவும் கடுமையாக நடந்துகொண்டிருக்கிறது. மற்ற பகுதிகளிலும் கடுமையாகவே இருக்கிறது. நாஜிகள் ஒடெஸ்ஸாவை ஐந்து நாட்கள் விடாமல் தாக்கினர்கள்; ரஷ்யர்கள் ட்னியப்பர் ஆற்றைத் தாண்டி பின்னேக்கிப் போகின்றனர். சென்ற செவ்வாய்க்கிழமை பகல் முழுவதும், ஜெனரல் ருன்ஸ்டெட், தன்னுடைய ஜெர்மன், ருமேனிய, ஹங்கேரியப் படையுடன் கருங்கடல் துறைமுகத்தைக் கடுமையாகத் தாக்கியதாக மாஸ்கோவிலிருந்து செவ்வாய்க்கிழமை இரவு வந்த செய்தி கூறுகிறது. கருங்கடலிலுள்ள ஒரு பெரிய ரஷ்ய கடற்படையை அழித்து விட்டதாக ஜெர்மானியர்கள் கூறிக்கொள்ளுகின்றனர். ஒடெஸ்ஸாவை மற்றொரு "டோப்ரூக்காக"

ரஷ்யர்கள் செய்யமுடியாதென்றும் அவர்கள் கூறுகின்றனர்: நாஜிகளின் பீரங்கிகள் குண்டு போடும் தூரத்தில் பட்டணத்திற்கு அருகில் இருப்பதால், ரஷ்யர்களுடைய நோக்கம் மேற்கூறியவாருக இருக்கலாம் என்று மாஸ்கோவில் கூறப்படுகிறது. அதே இரவில் ரஷ்யர்கள் கருங்கடலில் ஜெர்மன் துருப்பு முதலியவை ஏற்றிச்செல்லும் கப்பல்களை தீவைத்தோ அல்லது முழுகடித்தோ நாசம் செய்ததாக ரஷ்ய நள்ளிரவு அறிக்கை ஒன்று கூறுகிறது.

பால்டிக் பகுதியில், லெனின்கிராடை நோக்கி நாஜிகள் தாக்கிச் செல்கின்றனர் என்றும், அதற்கு தென்மேற்கில் 75 மைல் தூரத்திலுள்ள கிங்கிசெப் என்ற இடத்தில் நாள் பூராவும் கடுமையாக சண்டை நடந்ததாகவும், 100 மைல் மேற்கிலுள்ள நவோகிராட்டிலிருந்தும், ரஷ்யர்கள் வெளியேறினுர்களென்று கூறப்படுகின்றது.

லெனின்கிராடிற்கு வடமேற்கில், பின்லாந்திலுள்ள சொர்ட்டவாலாவிற்கு அருகில், லடோகா ஏரிக்கரையில் ரஷ்யப்படைகளை பின்லாந்து துருப்புகள் பலமாகத் தாக்கியதாகத் தெரிகிறது.

மத்தியப் பகுதியில், ஸ்மொலென்ஸிற்கும், கீவிற்கும் மத்தியிலுள்ள கோமெல் என்ற இடத்திலும் பலமாகத் தாக்குதல்கள் நடந்து வருகின்றன.

கருங்கடலில் நாஜிக்கப்பல்களை ஆகாய மூலமாக ரஷ்யா தாக்கி முழுகடித்ததினுல், ஜெர்மானியர்கள் யுக்ரெயின் கரையில் இறங்க முயற்சி செய்கின்றுர்களென்றும், ட்னியப்பர் ஆற்றுக் கரையிலுள்ள ரஷ்ய படையை பிடிப்பது அவர்கள் நோக்கமாயிருக்கலாமென்றும் தெரிகிறது.

மாஸ்கோ அறிக்கை பின்வருமாறு கூறுகிறது.—"ஆகஸ்ட்மீ 17உயில் நடந்த ஆகாயச் சண்டையில் மொத்தம் 28 ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. அன்றிரவும் மறுநாள் இரவும் ருமேனியாவிலுள்ள பிளெஸ்ட்டியை நம்முடைய விமானங்கள் குண்டுகள் போட்டுத் தாக்கின. பலவிடங்களில் வெடித்தும் பெரு நெருப்புப் பிடித்தும் எறிந்துகொண்டிருப்பதை நம்முடைய விமான ஓட்டிகள் பார்த்தனர். 30 ஜெர்மன் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன; 12 விமானங்களை இழந்தோம்'' இரவு முழுவதும் சண்டை நடந்து கொண்டிருந்ததாக அந்த அறிக்கை கூறுகிறது.

ஜெர்மன் அறிக்கை பின்வருமாறு கூறுகின்றது —"ஜெர்மன், ஹங்கேரிய, இத்தாலிய துருப்புகள் சேர்ந்த படைகளினுல் தெற்கு யூக்ரெய்னில் போட்ட சண்டைகளில் ட்னியப்பர் ஆற்றின் மேற்குக்கரைப் பிரதேசம் நம்முடைய கைவசமாயிற்று".

ஒடெஸ்ஸாவைத் தாக்கியதில், 60,000 ரஷ்யர்கள் கைதியாயினரென்றும், 84 'டாங்கி'களும், 530பீரங்கிகளும் கைவசமாயினவென்றும் தெரிகிறது. நிகோலயேவ் துறைமுகத்தில் பின் கூறப்படுபவைகளைக் கைப்பற்றியதாக அந்த அறிக்கை கூறிக்கொள்கிறது:

ஒரு 35,000 டன் யுத்தக்கப்பல், ஒரு 10,000 டன் கப்பல், 4 நாசகாரிகள், 2 சப்மரீன்கள். ஒடெஸ்ஸா துறைமுகத்தைத் தாக்கியதில், துருப்புகள் ஏற்றிச் செல்லும் ஒன்பது பெரிய கப்பல்களையும், மூன்று யுத்தக் கப்பல்களையும், ஒரு சண்டைக் கப்பலையும் (ஜெர்மன் ஆகாயப்படை) லுப்ட்வாப் சேதப்படுத்தி விட்டது.

மாஸ்கோவிலிருந்து ராய்டரின் விசேஷ நிருபர் தந்திமூலமாகத் தெரிவிக்கும் செய்தியின் சாரம் பின் வருமாறு:

நிகோலியேவ், கிரிவார்ராக் ஜெர்மனியரால் பிடிக்கப்பட்டன. வடமேற்குப் பகுதிகளிலும் யூக்ரெய்னிலும் ஜெர்மானியர் பலமாகத் தாக்கிக் கொண்டிருக்கின்றனர். டினியப்பர் கைத்தொழில் பிரதேசங்களைப் பிடிக்க ஜொமானியர் முயற்சிக்கின்றனர்.

பின்லாந்திலுள்ள ரஷ்ய கடற்படை தளமாகிய ஹாங்கோ இன்னும் ரஷ்யர்கள் வசமே யிருக்கின்றது. இது பால்டிக் கடலில் ஜெர்மன் கப்பல்போக்குவரத்துகளுக்கு பெரிய தடையாயிருக்கின்றது.

யூக்ரெய்னில், ரஷ்யர்கள் பலமாக எதிர்த்ததினுல் ஜெர்மானியர்கள் சுமார் 8 மைல் தூரம் துரத்தியடிக்கப்பட்டனர் என்று ரஷ்ய ராணுவப் பத்திரிகையாகிய 'ரெட் ஸ்டார்' கூறுகின்றது. ரஷ்யர்கள் முன்னேக்கித் தாக்கிக்கொண்டே யிருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

ருமேனியாவைச் சேர்ந்த கான்ஸ்டன்ஸா என்ற கருங்கடல் துறைமுகத்தை ரஷ்ய விமானங்கள் தாக்கினவென்று ஒரு ஜெர்மன் செய்தி ஸ்தாபனம் தெரிவிக்கின்றது.

எஸ்தோனியாவின் எல்லைப்புறத்தில் பெய்பஸ் ஏரியின் இரு கரைகளிலும் ஜெர்மன் துருப்புகள் முன்னேக்கிச் சென்று வடக்கேயுள்ள துருப்புகளுடன் சேர்ந்து கொண்டதனுல் பால்டிக் கடலுக்கும் பெய்பஸ் ஏரிக்கும் இடையிலுள்ள சுமார் 30 மைல் அகலமுள்ள நிலத்திலுல், எஸ்தோனியாவிலுள்ள ரஷ்யர்களைப் பிறித்துவிட்டனர் என்று ரோம் ரேடியோ கூறுகிறது.

நாஜிகள் கைவசமான கருங்கடல் துறைமுகப் பட்டணமாகிய நிகோலயேவும், உட் பட்டணமாகிய கிரிவாய்ராக்கும் இரும்பு உலோகங்கள் நிறைந்த இடமாயிருக்கின்றன. ரஷ்யர்கள் இந்த இரு பட்டணங்களையும் விட்டு வெளியேறுதவற்குமுன் சுமார் 20,000 ஜெர்மானியர்கள் கொல்லப்பட்டனரென்று தெரிகிறது. தெற்கு யூக்ரெய்னில் கீழே டினியப்பரை நோக்கி ஜெர்மானியர் முன்னேறி, பின் வாங்கிச் செல்லும் ரஷ்யர்களைத் துரத்திச் செல்வதாக ஜெர்மன் அறிக்கை ஒன்று கூறுகிறது.

ரஷ்யாவில் பனிக்கட்டிமீது ஊர்ந்து செல்வதற்காக 400,000 நீண்ட கால் கட்டைகளுக்கு ஜெர்மானியர் ஆர்டர் கொடுத்திருப்பதாக ஸ்டாக்ஹோம் (ஸ்வீடன் தேசம்) செய்தி கூறுகின்றது. இதிலிருந்து ரஷ்யா, மாரிக்காலமுழுவதும் தாக்கு பிடிக்குமென்று, பிரஸிடெண்ட் ரூஸ்வெல்ட், நம்பிக்கைகொண்டிருக்கின்ருர்.

ரஷ்ய விமானங்கள் பெர்லின், ஸ்டெட்டின் நகரங்களின்மேல் பறந்து பெருவாரியாக வெடிகுண்டுகளையும், அக்னி குண்டுகளையும், ராணுவ லட்சியங்களின் மீது போட்டு பத்திரமாகத் திரும்பி வந்தன என்று மாஸ்கோ ரேடியோ கூறுகின்றது.

சென்ற வாரத்தில், ஹிட்லர், தன்னுடைய காரியாலயத்தை யூக்ரெயினுக்கு மாற்றிவிட்டதிலிருந்து, யுத்தத்தைப்பற்றிய முக்கியமான அறிக்கை வெளியிடப்படலாமென்று ரோம் ரேடியோ கூறுகின்றது. தென் யூக்ரெய்னில், கருங் கடலின் வடகரையைப் பிடித்தது ஒரு பெரிய அம்சம் என்றும், அங்கேயிருந்துகொண்டு எவ்வளவோ வேலைகள் சாதிக்கமுடியும் என்பதை மனமுடைந்து கிடக்கும் ஜெர்மன் மக்களுக்கு எடுத்துக் காட்டுவதற்காகவே, ஹிட்லர் சென்றதாக கூறப்படுகிறது.

ஒடெஸ்ஸாவையும், நிகாலயேவையும் ஜெர்மானியர் பிடித்ததின் நோக்கம், அந்தப் பகுதியில் ரஷ்ய எதிர்ப்பை பலஹீனப்படுத்தி, க்ரீமியா பிரதேசத்தைக் கைப்பற்றி காகஸஸ்ஸிலுள்ள எண்ணெய் கிணறுகளைப் பிடிப்பதற்காக, அல்லது துருக்கி மூலமாக இராக்கையும், இரானையும் தாக்குவதற்காக இருக்கலாம் என்று லண்டன் டெயிலி டெலகிராப் பத்திரிகை தெரிவிக்கின்றது.

இரஸாயன யுத்தத்திற்கு ரஷ்யா, தயாராய்க் கொண்டுவருகிறது. விஷக்காற்று, மற்ற அபாயகரமான ரஸாயன யுத்த வஸ்துக்கள், இவைகளிலிருந்து பாதுகாத்துக்கொள்ளும் முறைகள் ரஷ்ய மக்களுக்கு, எடுத்துக்காட்டப்படுகின்றன. ஜெர்மானியர்கள் வெற்றியடைய எந்த மாதிரியான முறையையும் கையாளுவார்களென்றும் ரஷ்ய மக்களுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கின்றது.

கோமெல்லிற்கு வடக்கே நடந்த சண்டையில் ரஷ்யா தோல்வியடைந்ததென்றும், 78,000 பேர் கைதியாயினர் என்றும், 144 'டாங்கி'களும், 700 பீரங்கிகளும், யுத்த முஸ்தீப்புள்ள 2 ரயில்களும் பிடிக்கப்பட்டன என்று பெர்லின் ராணுவதலைமை காரியாலய அறிக்கை கூறுகிறது.

சான்பிரான்ஸிஸ்கோவிலிருந்து ரஷ்யதுறைமுகமாகிய விளாடிவாஸ்டாக்கிற்கு அமெரிக்கா, எண்ணெய் பிப்பாய்கள் பெருவாரியாக துரிதமாக அனுப்பிக்கொண்டிருக்கின்றது. ஒரு கப்பலில் 27,10,000 காலன்கள் எண்ணெயும், லாஸ் ஆன்ஜலிஸ் (வட அமெரிக்கா) துறைமுகத்திலிருந்து புறப்பட்ட ஒரு கப்பலில் 39,90,000 காலன்களும், ரிச்மண்டு துறைமுகக்கப்பலில் 43,93,200 காலன்களும் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கின்றது. இந்த கப்பல்கள் மத்திய சமுத்திரதீரத்தில் ஒன்ருகச்சேர்ந்து விளாடிவாஸ்டக் போய்ச் சேருமென்று தெரிவிக்கப்படுகிறது.

**குறிப்பு.—யுத்த சஞ்சிகையின் பிரதிகளைத் தயவுசெய்து ஒன்றின்பின் ஒன்ருக விடாமல் சேர்த்துவரவும்.**
[சென்னை இன்பர்மேஷன் டைரெக்டர் அவர்களால் அன்புடன் அளிக்கப்பட்டது.]

MADRAS: PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.